**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 131/2019**

PW2 – சுசித்ரா க/பெ வெங்கடேசன்
நாள் – 21.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

தாவா சொத்து என்பது C அட்டவணை சொத்தான சந்து என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் நடைப்பெற்றது என்றால் 1997 ஆம் வருடம். எனது ஆதார் கார்டு ரேஷன் கார்டு வாக்காளர் அடையாள அட்டை VNP நகர், தென்பாதி, சீர்காழி முகவரியில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து திருவெண்காடு கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் 40 வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா C அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 4 அடி அகலம் 60 அடி நீளம் கொண்டதாகும்.

மேற்படி அளவானது எந்த ஆவணத்தின் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் வீட்டோடு சேர்ந்து தான் கிரயம் பெறப்பட்டதாகும். தாவா சொத்தை பதிவு பெற்ற கிரயப்படி அனுபவித்து வருவதாக வாதியே வழக்குரையில் சொல்லவில்லை என்றும், எனது முதல் விசாரணையில் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதி வழக்குரையில் சொல்லாத சங்கதிகளை நான் எனது முதல் விசாரணையில் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சந்து பகுதியை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியதாக நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

சந்து பகுதி இதுநாள்வரையில் எங்கள் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் ஆமாம். தாவா C அட்டவணை சொத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு

முன்பாகவே பிரதிவாதிகளின் சொத்தில் ஒரு பகுதியாக இருந்து வருவதால்தான், உள்புறமாக திறக்கும் விதமாக பிரதிவாதி தாய் சுவற்றில் கதவு அமைக்கப்பட்டுள்ளது என்றும், நீர்மூழ்கி மோட்டார் மற்றும் பைப் லைன், சன்சைடும் அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள திறப்பானது தாய் சுவற்றில் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது விரிவாக்கம் செய்யப்பட்ட சுவற்றில் அமைக்கப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.10–ல் உள்ள புகைப்படத்தில் உள்ள தரைத்தளத்தில் உள்ள சன்சைடானது ஏற்கனவே இருந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–10 உள்ள புகைப்படத்தில் உள்ள திறப்பானது வழக்கிற்கு முன்பே பிரதிவாதிகள் சந்தை பயன்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு அமைக்கப்பட்டுள்ளதாகும். வா.சா.ஆ.10 புகைப்படத்தில் முன்பகுதியில் உள்ளதுதான் புதிதாக கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழைய சுவற்றுடன் அதே அளவிற்குத்தான் முன்பகுதி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் வீட்டிற்கு கிழக்கு புறம் ஒரு தாய் சுவர் தான் உள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் சொத்து வாங்கும்போதே அதில் RCC வீடு இருந்தது என்றால் சரிதான். RCC வீட்டின் தாய் சுவற்றைத்தான் முன்பக்கம் நீட்டியுள்ளார்கள் என்றால் முன்பக்கமும், பின்பக்கமும் நீட்டியுள்ளார்கள். RCC வீடு பிரதிவாதி 1990–ல் கிரயம் வாங்கும்போதே இருந்தது என்றால் வீடு வாங்கும் போது இருந்தது . வருடம் தெரியாது. வா.சா.ஆ.10–லேயே பழைய RCC வீட்டின் சன்சைடுகள் C அட்டவணை சொத்தை நோக்கி அமைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்து வாதிக்கு உரிமையும் இல்லை, அனுபவமும் இல்லை என்பதால் தான் என்னை சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் பக்கத்து வீட்டுக்காரர்கள் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை

என்றால் சரியல்ல. வழக்குரையில் சொல்லாத சங்கதிகளை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.